**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08022023-6736

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.08.2023

Accepted: 20.09.2023

Published: 01.10.2023

Citation:
Raja, A. "Adichanallur, Sivagalai, Korkai Excavations and Ancient History." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 2, 2023, pp. 39–48.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6736

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Adichanallur, Sivagalai, Korkai Excavations and Ancient History

**A. Raja**
*Head, Department of Museum, Tamil University*
*Thanjavur, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0001-8820-2413*

**Abstract**
In recent times in Tamil Nadu, the Tamil Nadu Government Archeology Department has carried out excavations at Adichanallur, Sivagalai and Korkai. These excavations have yielded abundant evidence of the ancient culture of Tamils. These evidences help a lot in knowing and creating human history. By subjecting this archaeological evidence to scientific analysis, its antiquity has been determined. Through this, the aim of this study is to study the ancient history, culture, lifestyle and civilization of Tamils. These studies explain the life, socio-economics, art, culture, literacy and trade of the 3200 years old Tamil society.

**Key Words:** Adichanallur, Sivagalai, Korkai Excavations, Antiquities, Scientific Chronology, Society, History, Culture.

**References**

1. Amarnath, and Rajesh, et al., 2018. *Excavation at Keeladi*, Sivaganga District, Tamil Nadu 2014-2015 and 2015-2016, Heritage: Journal of Multi disciplinaray Studies in Archaeology,6, University of Kerala, Kerala.
2. Bavani, M. 2019. *Sankath Thamizhar Panbaattai Baraisaatrum panaiyodu-kali ezhuththupoeippukalm Kaalamum (anmai kaala akazhaayvukal vazhi)*, Thamizhk Kalai Kaalandu Aayvithazh, Tamil University, Thanjavur.
3. Kaniyan Balan. 2020. *Pazhanthamizhaka (Keezhidi) Nakarikamum athan azhivum*, Peyal Aayvithazh. 6, Covai.
4. Nagaswamy, R. 1970. *Korkai Excavations*, Damilica, Vol.1, Tamil Nadu State Archaeology Deparment, Chennai.
5. Rajamanikkanar, M. 2018. *Mohonchodara allathu Sinthuvli nagarigam*, Namthamizhar pathibbakam, Chennai.
6. Rajendran, P. and Santhalingam, S. 2014. *Varalatru Nokkil Virudunagar maavattam*, Pandiya Nattu varalatru aayvu maiyam, Madurai.
7. Rajan, K. 1996. *Kodumanal Excavations – A Report*, K.V. Ramesh (ed.), Gauravam B.K.Gururajarao Felicitation Volume, Harman Publishing Company, New Delhi.
8. Rajan, K and Osmund Bopearachchi, 2002. *Graffiti Marks of Kodumanal (India and Ridiyagama (Sri Lanka)*, Man and Environment, vol. 27, no.2.
9. Rajan, K. 2018. *Thamizh – Bramiyin kaalam sikkalkalum theervukalum*, Aavam. 28, Tholliyal Kazhakam,Thanjavur.
10. Rajavelu, S. 2007. *Tholliyal Chutarkal*, Sekar pathibbakam, Chennai.
11. Raja, A. 2019. *Kodumanal Akalaayvukalum Tholporulkalum*, Vallamai E Journal, Chennai.
12. Raja, A. 2020. *Keeladi Akalaayvukal oru Koornokku Aayvukal*, Thamizhmozhi matrum Ilakkiya pannaattu aayvithazh.4, Maheswari Pathibbakam, Virudunagar.

13. Raja, A. 2023. *Pazhanthamizhar Vaazhviyalum Varalaarum*, Kaavya Pathibbakam, Chennai.
14. Sivanantham, R. Baskar, J. Prabhakarn, M and Thangadurai, T. 2022. *Porunai Aatrankarai Nakarikam*, State Dept. of Arhaeology, Chennai.
15. Sathyabhama Badhreenath. 2021. *Excavation at Adichchanallur*, Archaeological Survey of India, New Delhi.
16. Selvakumar, V., Raja, A., et al., 2016. *Preliminary Report of the Archaeological Excavation at Ambal (2015-16)*, Nagapattinam District, Tamil Nadu, Puratattava 46, Archaeological Society , New Delhi.
17. Seran, M. Sivanantham, R. (Ed)., 2019. *Keezhadi – Vagai Nathikkaraiyil Sanka Kaala Nagara Nakarikam*, State Dept. of Arhaeology, Chennai.
18. Subbarayalu, Y. 1985. *Vallam Excavations*, Tamiḻ Civilization, vol.2, no.4, Tamil University, Thanjavur.
19. Subbarayalu, Y. 2007. *Mankala Thamizh Brami Ezhuthu Porippukal*, Aavanam.19, Thamizhaka Tholliyal Kazhakam, Thanjavur.
20. Soundara Rajan, K.V. 1994. *Kaveripattinam Excavations 1963-73 (A port City of Tamil Nadu Coast)*, Memoirs of the Archaeological Survey of India No.90, ASI, New Delhi.
21. Shrithar, T. Shri. 2011. *Kodumanal Akalaayvu*, State Dept.of Arhaeology, Chennai.
22. Vengadesan, N. 2009. *Varalaatri Arikkamedu*, Thirumudi pathibbakam, Puducherry.

# ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை அகழாய்வுகளும் தொன்மை வரலாறும்

***முனைவர் ஆ. ராஜா***
தலைவர், அருங்காட்சியகம் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*தமிழகத்தில் அண்மைக்காலங்களில் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் அகழ்வராய்ச்சிகளை மேற்கொண்டனர். இந்த அகழாய்வுகளில் தமிழரின் தொன்மைப் பண்பாட்டுச் சான்றுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் மனிதனின் வரலாற்றை அறிவதற்கும் உருவாக்குவதற்கும் பெரிதும் உதவுகின்றன. இத்தொல்லியல் சான்றுகளை அறிவியல் முறைபடி ஆய்வுக்கு உட்படுத்தியதன் வாயிலாக இதன் தொன்மைக் காலத்தை வரையறை செய்துள்ளனர். இதன்வாயிலாகத்தமிழரின்தொன்மையானவரலாறு, பண்பாடு, வாழ்வியல்முறை, நாகரிகம்போன்றவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வகழாய்வுகள் 3200 ஆண்டுகள் தொன்மையான தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல், சமூகப் பொருளாதாரம், கலை, பண்பாடு, எழுத்தறிவு, வணிகம் ஆகியவற்றை விளக்குவதாக அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை அகழாய்வுகள், தொல்பொருட்கள், அறிவியல் முறை காலக்கணிப்பு, வாழ்வியல் முறை, வரலாறு, பண்பாடு.*

## முன்னுரை

மனிதனின் தொடக்ககால வரலாற்றை அறிவதற்கும் உருவாக்குவதற்கும் பெரிதும் துணை நிற்பன தொல்லியலும் அகழாய்வுச் சான்றுகளும் ஆகும். தொன்மை வரலாற்றைக் கட்டமைப்பதற்குத் தேவையான முதன்மைச் சான்றுகளைத் தேடி வரலாற்று அறிஞர்கள் பலர் தமிழகப் பகுதிகளில் கள ஆய்வுகள் மற்றும் ஆகழாய்வுகள் மேற்கொண்டதன் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகளை ஆய்வுக்கு உட்படுத்தி வரலாற்றை எழுதியும் மீளுருவாக்கமும் செய்துள்ளனர். அந்தவகையில் தமிழகத்தில் அண்மைகாலங்களில் ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் அகழ்வராய்ச்சிகளை மேற்கொண்டனர். அவ்வகழாய்வுகளில் தமிழரின் தொன்மைப் பண்பாட்டுச் சான்றுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இத்தொல்லியல் சான்றுகளை அறிவியல் முறைபடி ஆய்வுக்கு உட்படுத்தியதன் வாயிலாக இதன் தொன்மை காலத்தை வரையறை செய்துள்ளனர். இதன் வாயிலாகத் தமிழரின் தொன்மையான வரலாறு, பண்பாடு, வாழ்வியல் முறை, நாகரிகம் போன்றவற்றை ஆய்வுக்கு உட்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆதிச்சநல்லூர் அகழாய்வு

திருநெல்வெலி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர், தாமிரபரணி (தண்பொருநை) ஆற்றின் தென்கரையில், திருநெல்வேலி-திருச்செந்தூர் சாலையில் பாளையங்கோட்டையிலிருந்து 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் பரம்பு என்ற இடத்தில் 114 ஏக்கர் நிலப்பரப்பில் மண்மேடு உள்ளது. இம்மண்மேட்டில் தான் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முனைவர் எப். ஜாகோர் என்பவரால் 1876ஆம் ஆண்டு முதல் அகழாய்வு செய்யப்பட்டது. இவ்வகழாய்வில் கருப்பு -

சிவப்புநிறபாத்திரங்கள்,கருப்புநிறமூடிகள், இரும்பு ஈட்டி, முதுமக்கள் தாழியிலிருந்து கிடைத்த சிறிய கருப்பு-சிவப்பு நிற கிண்ணங்கள், அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள், முதுமக்கள் தாழிகள், கருப்பு-சிவப்பு நிற பானைகளின் குறுகியகழுத்துப்பகுதிகள்,கருப்புவண்ணம் தீட்டப்பட்ட தாங்கிகள், களி மண்ணால் வனையப்பட்டப் பாத்திரங்கள் போன்றவை கண்டறியப்பட்டன. இங்கு கிடைத்தப் பொருட்களை ஜாகோர் எடுத்துச் சென்று ஜெர்மன் நாட்டிலுள்ள பெர்லின் நகரில் அமைந்துள்ள தேசிய அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைத்துள்ளார். மேற்குறிப்பிட்ட இடங்களில் பாரிசுப் பல்கலைக்கழகத்தைத்தைச் சேர்ந்த எம். லூயிஸ் லாபிக் என்னும் தொல்லியல்அறிஞர்1903-04ஆம்ஆண்டுகளில் அகழாய்வை மேற்கொண்டார். இவ்வகழாய்வில் மட்கலங்கள், இரும்புப் பொருட்கள், வெண்கலப்பொருட்கள், விளக்குகள் போன்றவற்றைக் கண்டறிந்தார்.

இரண்டாவது அகழாய்வானது 1903-04ஆம் ஆண்டு அலெக்ஸண்டர் ரீ என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஏராளமான பண்பாடு சார்ந்த தொல் பொருட்கள் கண்டறிப்பட்டது. இவற்றில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வகைகளில் களிமண்ணாலான மட்பாண்டங்களையும் இரும்பு ஆயுதங்களையும் அலெக்ஸாண்டர் ரீ கண்டறிந்தார். குட்டையான வெட்டுவாய்ப் பகுதியையுடைய வாள்கள், கத்திகள், மனிதர்களின் மண்டையோடுகள், மிகுதியான எலும்புகள், மட்கலயங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் உமிகள் போன்றவற்றைக் கண்டறிந்தார். இறந்தவர்களைப் புதைக்கும் ஈமக்காட்டில் அகழாய்வு செய்ததில் பெரிய அளவிலான முதுமக்கள் தாழிகள் பல கிடைத்துள்ளன. இத்தாழிகள் 6அடி ஆழத்திலும் சில தாழிகள் 12அடி ஆழம் வரையிலும் புதைக்கப்பட்டிருந்தது. இவர் மேற்கொண்ட முதல் அகழாய்வில் 1872 தொல் பொருட்களும், இரண்டாவது அகழாய்வில் 4000 க்கும் மிகுதியான பொருட்கள் கண்டறியப்பட்டன. இதுவரை தமிழகத்தில் செய்யப்பட்ட அகழாய்வு இடங்களில் ஆதிச்சநல்லூர் ஈமக்காடு பகுதியே மிகப் பரந்தவையாகும். இங்குச் சேகரிக்கப்பட்ட தொல்பொருட்கள் குறித்து ஒரு பட்டியல் 1913ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு சென்னை அரசு அருங்காட்சியகத்தின் சார்பாக 1915ஆம் ஆண்டு ஒரு நூல் வடிவில் வெளியிடப்பட்டது. மேலும், ஆதிச்சநல்லூரில் கிடைத்த தொல் பொருட்களை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைத்துள்ளனர்.

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு 2003-05 வரையிலான ஆண்டுகளில் இந்திய தொல்லியல் துறையினர் முனைவர் சத்தியமூர்த்தி தலைமையில் அகழாய்வுகளை மேற்கொண்டனர். இதில் 160க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள், பெண் உருவம் அலங்கரிக்கப்பட்ட பானை ஓடு, மட்பாண்டங்கள், சுடு மண்ணாலான பொருட்கள், இரும்புக் கருவிகள், மனித எலும்புக்கூடுகள் ஆகியவற்றைக் கண்டெடுத்தனர்.

இவற்றைத் தொடர்ந்து 2019-21 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் ஆதிச்சநல்லூரில் பழங்கால மக்கள் வாழ்ந்த வாழ்விடப்பகுதியைக் கண்டறிந்து அதில் அகழாய்வுகளை மேற்கொண்டு இரும்புக் காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்கக் காலத்தைச் சார்ந்த 847 தொல் பொருட்களையும், குறியீடுகளைக் கொண்டுள்ள பானைஓடுகளையும்,தமிழிஎழுத்துப்பொறிப்புள்ள பானை ஓடுகளையும் கண்டறிந்துள்ளனர். இப்பகுதியில் தொடக்கக்காலக் குடியேற்றங்களை வெளிக்கொணரும் நோக்கில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அண்மையில் அகழ்வாராயச்சியை மேற்கொண்டது. இவ்வகழ்வாராய்ச்சியில் தொன்மையான வாழ்விடங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு இரண்டு பண்பாட்டு வாழ்விடங்கள் அதாவது இரும்புக் காலம்

மற்றும் வரலாற்றுத் தொடக்கக்காலம் சார்ந்த பண்பாட்டு வாழ்விடங்கள் வெளிப்பட்டுள்ளது. இவற்றோடு கற்காலப் பண்பாட்டை உணர்த்தும் நுண்கற்காலப் பண்பாட்டுத் தடயங்களும் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் இவ்விடத்துடன் மிகத் தொன்மையைப் புலப்படுத்துகின்றன.

## தொல்பொருட்கள்

ஆதிச்ச நல்லூரில் அண்மைக் காலங்களில் அகழ்ந்த இடங்களில் 3000 தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. இவ்வகழாய்வில் இதுவரை கிடைத்தச் சான்றுகளின் அடிப்படையில் மிகவும் தொன்மை வாய்ந்த பண்பாடாக நுண்கற்காலம் கருதப்படுகிறது. இவ்வகழாய்வில் கடைசி மண்ணடுக்கில் செர்ட் வகை கற்களால் செய்யப்பட்ட கத்தியின் முனைப்பகுதி மற்றும் சுரண்டி போன்ற நுண்கற்காலப் பண்பாட்டுக் கருவிகள் (படம்:1) கிடைத்துள்ளன. இப்பண்பாட்டுச்சான்றுகள் முதுமக்கள் தாழி இருந்ததற்குக் கீழ்ப் பகுதியில் காணப்பட்டது.

இதற்கு அடுத்த நிலையில் இரும்புக் காலப் பண்பாட்டை புலப்படுத்துகின்ற முதுமக்கள் தாழிகளும் அதனோடுகூடிய ஈமப்பொருட்களும் மிகுதியாகக் கிடைத்து உள்ளன. இந்த ஈமத்தாழியுடன் கிடைத்த மட்பாண்டங்களைப் போன்று வாழ்விடப் பகுதிகளிலும் கிடைத் ள்ளன. இவ்வாழ்விடப் பகுதிகளில் வெள்ளை வண்ணப் புள்ளிகள் இடப்பட்ட கருப்பு -சிவப்பு மட்பாண்டகள், கிண்ணங்கள் போன்றவை கிடைத்துள்ளன. மேலும் முதுமக்கள் தாழிகள், மூடியுடன் கூடிய முதுமக்கள் தாழி, கருப்பு-சிவப்பு நிறப் பானைகள், கருப்பு நிறத் தாங்கிகள், கருப்பு நிறக்கிண்ணங்கள், கருப்பு - சிவப்பு நிறக்கிண்ணங்கள் அதற்கான மூடிகள், சிவப்பு நிறப் பானைகள், கருப்பு நிறக் கலங்கள், துளையிடப்பட்டக் கூரை ஓடுகள், இரும்பிலான பொருட்கள், 500க்கும் மிகுதியான எண்ணிக்கையில் குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் முதலியன கிடைத்துள்ளன. இங்கு முதுமக்கள் தாழிகள் மிகுதியாகக் காணப்படுவதால் இது "தாழிக்காடு" என்று அழைக்கப்படுகிறது. ஆதிச்சநல்லூர் அகழாய்வில் இதுவரை எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள் கிடைத்திராத நிலையில் இவற்றை பூர்த்தி செய்யும் வகையில் தற்போது தமிழி எழுத்துக்களுடன் கூடிய பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்பின் வாயிலாக இங்கு வாழ்ந்த வரலாற்றுத் தொடக்கக்கால மக்கள் எழுத்தறிவு பெற்றச் சமூகமாக இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

இங்கு கிடைத்துள்ள தொல்பொருட்களில் வட்டச் சில்லுகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. மேலும், கண்ணாடி மணிகள், தந்தத்தில் செய்யப்பட்ட மணிகள், கல் மணிகள், சுடுமண்ணாலான மணிகள், கண்ணாடி வளையல் துண்டுகள், செம்பு மற்றும் இரும்பு மோதிரங்கள் ஆகியவை அகழாய்வில் வெளிக் கொணரப்பட்டுள்ளன (படம்:1-10) (இரா.சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு.பிரபாகரன், த.தங்கதுரை, 2022: பக். 24-51). இப்பொருட்கள் வாயிலாக இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறையை அறிய முடிகிறது. இவர்கள் அக்காலச் சமூகத்தில் வளர்ச்சியடைந்த தமிழ்ச் சமூகத்தினர்களாக இருந்திருக்க வேண்டும். காரணம் இவர்கள் பயன்படுத்திய அணிகலங்கள் உயர்தரம் வாய்ந்தவையாக இருந்துள்ளன. ஆகையால் வரலாற்றுத் தொடக்கக்காலத் தமிழ்ச்சமூகம் ஒரு மேம்பட்ட நிலையில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அக்காலத்திய மக்கள் தங்கள் வாழ்விடப் பகுதியில் நிலையாக வசிப்பதற்கென்று தங்களுக்கான வீடுகளை அமைத்துக் கொண்டனர். அவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகளில் களி மண்ணைக் கொண்டு தளம் அமைத்துள்ளனர். இப்படி அமைக்கப்பட்ட மண்தரையைத் தேய்பதற்காகப் பயன்படுத்திய

கற்கள், அரவைக்கற்கள் மற்றும் கருவிகளைக் கூர்மையாக்கும் கற்கள் என, வீடுகளில் அன்றாட வாழ்கைக்குப் பயன்படுத்தும் பொருட்களும் கிடைத்துள்ளன. அக்காலத்தில் நீர் மேலாண்மை எவ்வாறு இருந்துள்ளது என்பதற்குக் காட்டாக சுடுமண்ணால் செய்யப்பட்ட குழாய்கள் 21 எண்ணிக்கையில் கிடைமட்டத்தில் ஒன்றோடு ஒன்று இணைத்து நீர் வெளியில் செல்வதற்கு ஏற்றவாறு நுட்பத்துடன் அமைத்துள்ளனர். இந்நுட்பத்திறனை நோக்கும் போது பண்டைய தமிழர்கள் கட்டுமானக் கலைத் திறன் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர் எனலாம். இக்குழாய் அமைப்பானது வீடுகளில் இருந்து கழிவுநீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதே போன்று சுடுமண்ணால் செய்யப்பட்ட மனிதர்கள் மற்றும் பறவைகளின் உருவங்கள் அகழாய்வில் கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்பின் வாயிலாகத் தொல் தமிழர்கள் கைவினைப் பொருட்கள் உருவாக்கத் தெரிந்தவர்களாகவும், உருவக் கலை நுட்பம் அறிந்தவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது. மேற்குறித்தச் சான்றுகள் பண்டையத் தமிழர்களின் வாழ்வியலைப் புலப்படுத்து வனவாக உள்ளன.

### சிவகளை அகழாய்வு

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சிவகளை என்ற ஊர் மாவட்டத்தின் தலைநகரானத்தூத்துக்குடியிலிருந்து 31 கி.மீ தொலைவிலும் ஸ்ரீவைகுண்டம் என்ற இடத்திலிருந்து 10 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2020-2021 மற்றும் 2021-22 ஆகிய காலக்கட்டங்களில் அகழாய்வினை மேற்கொண்டது.

### தொல்பொருட்கள்

இவ்வகழாய்வில் பழங்கால மக்கள் வாழ்ந்த வாழ்விடங்களும் அதில் பானை ஓடுகளில் குறியீடுகளும், தமிழ்ப்பண்பாட்டை அடையாளப்படுத்தும் “ஆதன்” என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடும் கிடைத்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்த பானை ஓடுகளில் 780 எழுத்துப் பொறித்த பானையோடு கள்கிடைத்துள்ளன. இவற்றில் மிகுதியாக கொடுமணல், அழகன்குளம், அரிக்கமேடு, உறையூர், பொருந்தல், போன்ற இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன என்பதை இங்கு குறிப்பிடுவது ஏற்றதாகும். இதில் ஆட்பெயர்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளே மிகுதியாக உள்ளன (மா.பவானி, 2019:பக்.43-70). இதே போன்று கீழடி அகழாய்வுகளில் மிகுதியான (நான்காம் கட்ட அகழாய்வில் 50க்கும் மேற்பட்ட) தமிழ் பிராமி (தமிழி) எழுத்துப் பொறித்தப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இதன் வாயிலாக கீழடியில் கி.மு.6ஆம் நூற்றாண்டில் எழுத்தறிவுப் பெற்ற சமூகம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது (ஆ.ராஜா, 2023: பக்24-33).

இவற்றோடு சிவகளையில் பழங்கால மக்கள் பயன்படுத்திய கருப்பு-சிவப்பு வண்ணக் கிண்ணங்கள் கிடைத்துள்ளன. இதில் ஒரு கிண்ணத்தின் வெளிப்புறத்தில் விளிம்பு பகுதியில் வரிசையாக வெள்ளை வண்ணத்தில் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது (படம்: 11-16). இந்த வேலைப்பாடானது வெள்ளை வண்ணப் புள்ளிகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளதால் காலத்தால் பழமையானவை எனக் கருதலாம். ஏனெனில் தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப்பழங்கால மரபுச் சின்னங்களில் (பாறை ஓவியங்கள்) வெள்ளை வண்ணப்பூச்சு என்பது மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகிறது. ஆதலால் இவ்வகழாய்வில் வெள்ளை நிற அலங்கரிப்புடன் கிடைத்துள்ள கிண்ணம் குறிப்பிடத்தக்கவையாக உள்ளது. செங்கற்களைக் கொண்டு வாய்க்கால் ஒன்று கட்டமைக்கப்பட்டுள்ளது. இது கழிவுநீர்

வெளியேறுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டிருக்கலாம். பழங்கால மக்கள் நெசவுத்தொழிலில் ஈடுபட்டமைக்கானச் சான்றாக நூல் நூர்க்கப் பயன்படுத்தப்படும் தக்களி கண்டறியப்பட்டுள்ளது.

சிவகளையிலுள்ள பழங்கால வாழ்விடப் பகுதி அகழப்பட்ட இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் தொன்மையான ஈமகாடு உள்ளது. இந்த ஈமகாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சிறிய அளவில் இரும்பாலான மண்வெட்டி, கத்தி, ஈட்டி, வாள் ஆகியவை கிடைத்துள்ளன. மேலும், குடுவைகள், கருப்பு-சிவப்பு நிறக் கலயங்கள், பானை மூடிகள், கருப்பு-சிவப்பு வண்ணக் கிண்ணங்கள், முதுமக்கள் தாழி, வட்டச்சில்லுகள் பலவும் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு 45க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. இவற்றில் ஒரு அகழாய்வு குழியில் மட்டும் 16 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இத்தாழிகள் இரண்டு அடி முதல் நான்கு அடி வரை உயரம் உடையதாக உள்ளன. இங்கு இரண்டு வகையான தாழி அமைப்புகளைக் காணமுடிகிறது. ஒன்று பெரிய அளவிலானத் தாழிகளும். மற்றொன்று சிறிய அளவிலானத் தாழிகளும் உள்ளன. இதில் அளவில் பெரியதாகவுள்ளத் தாழிகள் கீழ்ப்பகுதியிலும், சிறிய வகை தாழி இதன் மேல் பகுதியிலும் கிடைத்துள்ளன. கீழ்ப்பகுதியிலுள்ள தாழிகள் காலத்தால் தொன்மையானதாகவும், சிறிய தாழிகள் அதற்கு அடுத்து வரக்கூடிய காலக் கட்டத்தைச் சார்ந்தவையாகவும் கருதலாம்.

இங்கு 2021-22ஆம் ஆண்டில் அகழப்பட்டதில் பெரிய கல்வட்டம் ஒன்று கிடைத்தது. இந்த கல்வட்டம் நான்கு அறைகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கல்லறையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அடக்கம் செய்திருக்கலாம் என தெரிகிறது. மேலும், கீழ்பகுதியில் நுண்கற்காலக் கருவிகள் சில கிடைத்துள்ளன. (இரா.சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு.பிரபாகரன், த.தங்கதுரை, 22:பக்.52-57). எனவே, சிவகளையில் பண்பாட்டின் காலம் நுண்கற்காலப்பண்பாடுவரைநிலவியது என கிடைத்த சான்றுகளின் வழி புலனாகிறது.

## அறிவியல் முறை காலக்கணிப்பு

சிவகளை பறம்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் முதுமக்கள் தாழியில் ஒரு கலயத்துடன் நெல்மணி கிடைத்தது(படம்). இந்த நெல்லினை அமெரிக்கா நாட்டில் மியாமி நகரில் அமைந்துள்ள பீட்டா அனலெட்டிகல் பகுப்பாய்வுக் கூடத்திற்குக் காலக்கணிப்புக்கு அனுப்பட்டது. அதில் அறிவியல் முறைப்படி கரிமப் பகுப்பாய்வுக்கு உட்படுத்திக் காலகணிப்புச் செய்ததில் இதன் காலம் கி.மு.1155 என வரையறை செய்துள்ளனர் (இரா. சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு.பிரபாகரன், த.தங்கதுரை, 2022:பக்.15-16). இந்த காலக் கணிப்பின் படி தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள சிவகளையின் நாகரிகம் 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் முறைப் படியான ஆய்வு தெளிவுப்படுத்துகின்றது.

## கொற்கை அகழாய்வு

தூத்துக்குடி மவட்டம், ஏரல் வட்டத்தில் அமைந்துள்ள கொற்கை பாண்டிய நாட்டின் தலைநகராகவும் துறைமுகப்பட்டினமாகவும் விளக்கியது. அத்தகைய வரலாற்றுச்சிறப்புமிக்க இடத்தில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1968-69ஆம் ஆண்டு அகழாய்வினை மேற்கொண்டு பல தொன்மையான பொருட்களைக் கண்டறிந்தனர். இவ்வகழாய்வில் கிடைத்த பொருட்களைக் கரிமப் பகுப்பாய்வு செய்ததில் கி.மு.785ஆம் காலத்தைச் சேர்ந்தது உறுதிசெய்யப்பட்டது (இரா.சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு.பிரபாகரன், த.தங்கதுரை, 2022: ப.58). கொற்கை பாண்டி நாட்டின் தலைநகராகவும், துறைமுகப்பட்டினமாகவும் விளக்கியது என்று மேற்குறிப்பிட்ட அகழாய்வு வெளிப்படுத்தியது. இதன்

பிறகு நடப்பாண்டுகளில் தமிழ்நாடு அரசு துறையினர் அகழாய்வு செய்து வருகின்றனர். இவ்வகழாய்வில் 22 குழிகள் அகழப்பட்டன. இதில் 812 தொல் பொருட்கள் கிடைத்துள்ளன. இவற்றில் 75விழுக்காடு வரை வட்ட வடிவ சில்லுகள் கிடைத்துள்ளன.

### தொல்பொருட்கள்

மேலும், சங்கு வளையல் துண்டுகள், அருக்கப்பட்ட சங்குகள், முழுமையான சங்குகள், பாதி அறுத்த நிலையிலுள்ள சங்குகள் போன்றவை கிடைத்துள்ளன. இதில் மெருகேற்றப்பட்ட சங்கு வளையல் கிடைத்துள்ளது. அதாதவது கோடு, நட்சத்திரம் போன்ற வடிவமைப்புகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவற்றோடு சங்கு அறுக்கும்போது சூடு தணிவதற்காக நீர் ஊற்றுவதற்குப் பயன்படுத்திய கெண்டி மூக்குப் பானை கிடைத்துள்ளது. இது அரிய வகையாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் கிண்ண வகையில் கெண்டி மூக்குடன் கிடைத்திருப்பது சிறப்பானதாகும். அதே போன்று சங்கை மெருகேற்ற பயன்படுத்தியக் கற்கள், சங்கு மோதிரம் ஆகியவைக் கண்டறியப்பட்டுள்ளன. சங்குகளால் உருவாக்கப்பட்ட இச்சான்றுகள் மிகுதியாகக் கிடைப்பதை நோக்கும்போது இங்கு சங்கு வளையல் மற்றும் சங்கில் உருவாக்கப்படும் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களில் பழங்கால மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் சதுரடி வடிவிலான செங்கற் கட்டுமானம் வெளிப்பட்டது. இச்செங்கற் கட்டுமானம் 2.35மீ உயரத்தில் 29 அடுக்குகளைக் கொண்டுள்ளது (இரா. சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு. பிரபாகரன், த. தங்கதுரை, 2022: ப.59). இக்கட்டுமானதின் நடுவே ஒரு பெரிய கொள்கலன் அடையாளம் காணப்பட்டது. இந்தக் கொள்கலன் சுமார் 4 அடி உயரத்தில் உள்ளது. இக்கொள்கலன் தானியங்களைச் சேமித்து வைப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கலாம். இக்கட்டமைப்பானது சங்காலக் கட்டமைப்பாக உள்ளது. இக்கட்டுமானத்தில் அடிப்பகுதி (தரைத்தளம்) சுக்கான், பாறைக்கற்கள் கொண்டு அடுக்கி அதன் மீது மணல் பரப்பச்செய்து அதன் மேல் கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது. மேற்குறித்த இக்கட்டமைப்பு முறையை நோக்கும் போது பழங்காலத் தமிழர்கள் நன்கு திட்டமிட்டு நுட்பமான முறையில் கட்டுமானங்களைக் கட்டமைக்கும் கலையை அறிந்தவர்களாக இருந்துள்ளனர் எனலாம். இதேபோன்று அண்மையில் கீழடி, சிவகளை போன்ற இடங்களில் பழங்காலச் செங்கற் கட்டமைப்புகள் கிடைத்திருப்பதை இங்கு குறிப்பிடுவது ஏற்றதாகும்.

மேலும், செங்குத்தாக அமைக்கப்பட்டுள்ள ஒன்பது அடுக்குகள் கொண்ட துளையிடப்பட்ட சுடுமண் குழாய்கள் (படம்:17-20), கண்ணாடி மணிகள், கடல் சிப்பிகள், கடல்வாழ் உயிரினங்களின் எலும்புகள், ரோம் நாட்டு எண்ணெய் சாடி, கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணம் பூசப்பட்ட பானை ஓடுகள், வெள்ளி முத்திரைக்காசு, வடக்கத்திய மெருகேற்றப்பட்ட கருப்பு நிறப் பானை ஓடுகள் ஆகியவைக் கிடைத்துள்ளன.

### வணிகத் தொடர்பு

இவற்றோடு மேற்கத்திய நாட்டுப் பானை ஓடுகள் அரிட்டேன் வகை பானை ஓடுகளும், சீன நாட்டுப் போர்சிலின் வகைப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இச்சான்றுகளை நோக்கும்போது கொற்கை கி.மு.8ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே கீழைநாடுகளுடனும், மேலைநாடுகளுடனும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை அறியமுடிகிறது.

தென்னிந்தியாவானது கி.மு.6ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இந்தியாவின் பல்வேறு பகுதிகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்று இந்தியத் தொல்லியல் துறையின் மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி மற்றும் இந்து பனாரஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரவிந்திரநாத் சிங் ஆகியோர் கருதுகின்றனர் (இரா.சிவானந்தம், ஜெ.பாஸ்கர், மு.பிரபாகரன், த.தங்கதுரை, 2022:ப.60). எனவே, மேற்குறிப்பிட்ட கருத்தின்படியும் அண்மைக் காலங்களில் கொற்கை நடைபெற்ற அகழாய்வில் கிடைத்தச் சான்றுகளின் படியும் கி.மு.8ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அயல்நாடுகளுடன் தொடர்புக்கொண்டிருந்தது என்பது புலப்படுகிறது.

## நிறைவுரை

ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகள் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளின்வழி தமிழரின் தொன்மையான பண்பாட்டுக் காலம் 3200 ஆண்டுகளுக்கு முந்தயது என அறிவியல் முறைப்படியான காலக்கணிப்பு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக சிவகளை அகழாய்வில் கிடைத்த நெல்மணிகளைக் காலகணக்கீடு செய்ததில் இதன் காலம் கி.மு.1155 என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. கீழடி, சிவகளை, கொற்கை ஆகிய ஊர்களில் வாழ்விடப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சங்காலச் செங்கற் கட்டமைப்புகள் கிடைத்திருப்பது மூலம் சங்கால மக்களின் வாழ்விடத்தையும் அவர்களின் கட்டுமான நுட்பத்தையும் நோக்கமுடிகிறது. மேலும், தொன்மையான தமிழரின் நகர நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்து வதாகவும் கீழடி அகழாய்வுகள் உள்ளது. சங்ககாலச் செங்கற்கட்டடமைப்புகள், உறைக்கிணறுகள், கூரை ஓடுகள், சுடுமண் குழாய்கள், சாயத்தொட்டிகள், இரும்பு மற்றும் செம்பிலான பொருட்கள், மணிகள், காதணிகள், வட்ட வடிவ விளையாட்டுச் சில்லுகள், கருப்பு-சிவப்பு நிற பானை ஓடுகள், குறியீடுகள், தமிழ் பிராமி (தமிழி) எழித்துப் பொறிப்புகளுடன் கூடிய பானை ஓடுகள் போன்றவை கிடைத்திருப்பதை நோக்கும் போது, கீழடியில் மிகச் சிறந்த பண்டைய தமிழர் பண்பாடானது செழித்திருந்தது எனலாம். இக்காலக்கட்டத்தில் பழந்தமிழர்கள் எழுத்தறிவு, வேளாண்மை, கட்டுமானக்கலை போன்றவற்றை நன்கு அறிந்தவர்களாகவும், நகர நாகரிகப் பண்பாட்டைக் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை மேற்குறிப்பிட்ட அகழாய்வுச் சான்றுகள் புலப்படுத்துகின்றன. இவற்றில் வைகை ஆற்றங்கரைப் பண்பாட்டைக் கொண்டுள்ள கீழடியின் பண்பாட்டுக் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டு எனவும், தாமிரபரணி ஆற்றங்கரைப் பண்பாட்டைக் கொண்டுள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகியவை கி.மு.12ஆம் நூற்றாண்டு எனவும் ஆய்வின் முடிவுகள் புலப்படுத்துகின்றன. தமிழரின் தொன்மை வாய்ந்த இந்நகர நாகரிகத்தை சிந்துச்சமவெளி நாகரிகத்திற்கு இணையாகவே கருதலாம்.

## சான்றெண் விளக்கம்


1. இராசமாணிக்கனார், மா., 2018, *மொஹஞ்சொ- தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்*, சென்னை, நாம் தமிழர் பதிப்பகம், பக்.62-63.
2. இராசேந்திரன், பொ, சாந்தலிங்கம், சொ. 2014, *வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம்*, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம், மதுரை, ப.3.
3. இராசவேலு, சு. 2007, *தொல்லியல் சுடர்கள்*, சென்னை, சேகர் பதிப்பகம், ப.86.
4. இராஜன், கா. 2018, *தமிழ்-பிராமியின் காலம் சிக்கல்களும் தீர்வுகளும்*, ஆவணம் இதழ்-28, தஞ்சாவூர், தொல்லியல் கழகம், பக் 255-272.

5. கணியன் பாலன்., 2020, *பழந்தமிழக (கீழடி) நகர நாகரிகமும் அதன் அழிவும்,* பெயல் ஆய்விதழ் 6, பெயல், பி.வி கிராபிக்ஸ் அச்சகம், கோயம்புத்தூர், பக்6-7.
6. சிவானந்தம், இரா., பாஸ்கர், ஜெ., பிரபாகரன், மு., தங்கதுரை, த., 2022, *பொருநை ஆற்றங்கரை நாகரிகம்,* தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
7. சுப்பராயலு, எ., 2007, *மண்கல தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறிப்புகள்,* ஆவணம் இதழ்-19, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக்189-221.
8. சேரன்,எம், சிவானந்தம், ஆர்., (ப.ஆ), 2019, *கீழடி - வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம்,* தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
9. பவானி, மா. 2019, சங்கத் தமிழர் பண்பாட்டைப் பறைசாற்றும் பானையோடுகளின் எழுத்துப் பொறிப்புகளும் காலமும் (அண்மைக் கால அகழாய்வுகளின் வழி), தமிழ்க் கலை காலாண்டு ஆய்விதழ், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம்.
10. ராஜா, ஆ. 2023, *பழந்தமிழர் வாழ்வியலும் வரலாறும்,* சென்னை, காவ்யா பதிப்பகம்.
11. ராஜா, ஆ. *கொடுமணல் அகழாய்வுகளும் தொல்பொருட்களும்,* வல்லமை மின்னிதழ், 30.01.2019.
12. ராஜா, ஆ. 2021, *கீழடி அகழாய்வுகள் ஒரு கூர்நோக்கு ஆய்வு,* தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் 4, விருதுநகர், மகேஸ்வரி பதிப்பகம்.
13. வெங்கடேசன், ந. 2009, *வரலாற்றில் அரிக்கமேடு,* புதுச்சேரி, திருமுடி பதிப்பகம், ப.32.
14. ஸ்ரீதர்,தி.ஸ்ரீ., (2011), கொடுமணல் அகழாய்வு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, பக்.15-22.